இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, இளைஞரணியின் அடுத்தக்கட்டப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். மேலும் இளைஞரணி மாநாட்டுக்கான அறிவிப்பு வெளியான நாள் முதல், மாநாட்டு நாள் வரை நம் மாநில உரிமை மீட்பு மாநாட்டின் வெற்றிக்காக அயராது உழைத்த இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அன்பையும், நன்றியையும் தெரிவித்து, நினைவுப் பரிசை வழங்கினார்.

கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 75 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு 'குறிஞ்சி' முகாம் அலுவலகத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் அமைந்துள்ள லேடி வில்லிங்டன் பள்ளிக்கான ஆய்வகம், சமையல் மற்றும் உணவுக்கூடம் இவற்றுக்கானக் கட்டுமானப் பணிகளை பள்ளிக்கல்வித்துறை 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' முன்னெடுப்பின் மூலம் தொடங்குவதற்கு பள்ளி மாணவர்களுடன் இணைந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மேலும், இந்த நிகழ்வின் போது, அரசுப்பள்ளிக்கு தன்னுடைய நிலத்தை வழங்கிய மதுரை ஆயி அம்மாள் அவர்களை, முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருதினை குடியரசு தினத்தில் பெற்றமைக்காக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில்

அனைத்து யுக்திகளையும் பயன்படுத்தி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம்!

திருச்சி வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, ஜன. 28 - திருச்சி தென்னூரில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பமுலூர் சின்ன சாமி மணிமண்டபத்திலும், விராலிமலை சண்முகம் மணி மண்டபத்திலும், பல்வேறு அரசியல் கட்சியினர் மொழிப்போர்த் தியாகிகள் நாளன்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தி னார்கள். பின்னர் தமிழ் மொழியை பாதுகாக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இந்தி மொழி திணிப்பை எதிர்த்த மொழிப் போராட்டத்தில் அன்னை தமிழுக்காக கடந்த 25.01.1964 ஆம் நாள், கீழப்ப முலூர் சின்னசாமியும், கடந்த 25.02.1965 ஆம் நாள் விராலி மலை சண்முகமும் உயிர்நீத் தார்கள். அவர்கள் இருவருக் கும் திருச்சி தென்னூர் உய்யக்கொண்டான் ஆற்றின் கரையில் தனித்தனியாக மணிமண்டபங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

மொழிப்போர்த் தியாகி கள் நினைவு மண்டபத்திற்கு பேரணியாக வந்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், பள்ளிக் கல்வித் துறை அமைச் சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர், கழகத் தொண்டர்கள், நிர்வாகிகள், தியாகிகள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தி னார்கள்.

பின்னர் பேரணியின் முடி வில் திருச்சி தென்னூர் உழ வர் சந்தை அருகே தி.மு.க. சார்பில் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற் றது.

சர் கே.என்.நேரு பேசுகையில் ...

அந்த கூட்டத்தில் அமைச் விராலிமலை சண்முகம், கீழப்பமுலூர் சின்னசாமி உள் ளிட்ட மொழிப்போர்த் தியா கிகள் செய்த தியாகத்தால் இன்று தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. இன்றும் இந் தியை கற்றுக் கொள்ளுங்கள். இந்தி கற்றால் தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என பலர் பேசி வருகிறார்கள். ஆனால் உண்மையான நிலை என்பது இந்தி பேசக்கூடிய வடமாநிலங்களைச் சேர்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட் டோருக்கு தெரியும். அவர் கள் தமிழ்நாட்டிற்கு தான் வேலை தேடி வந்திருக்கிறார் கள். அவர்களுடைய மாநி லங்களில் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

நாம் இருமொழிக் கொள் கையை பின்பற்றி ஆங்கிலம் கற்றுக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

தி.மு.க. ஆட்சி பொறுப் பேற்ற பின்பு தி.மு.க. தொண் டர்களிடையே சுறுசுறுப்பு சற்று குறைவாக இருக்கிறது. வரும் நாடாளுமன்றத் தேர் தலில் திருச்சி மக்களைவைத் தொகுதியை தி.மு.க.விற்கு ஒதுக்க வேண்டும் என தி.மு.க. தொண்டர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இது குறித்து நான் தலைவரிடம் பேசுவேன்.

திருச்சி தொகுதியை தி.மு.க. வுக்கு ஒதுக்கிறார்களோ? கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக் குகிறார்களோ? யாருக்கு ஒதுக்கினாலும் நாம் அவர் களை வெற்றி பெற செய்ய பாடுபட வேண்டும்.

திருச்சி தொகுதியில் கடந்த 45 ஆண்டுகாலம் தி.மு.க. போட்டியிடவில்லை. அதனால் இத்தொகுதியை இந்த முறை தி.மு.க.விற்கு ஒதுக்கச்சொல்லி தலைவரிடம் கேட்போம். திருச்சி மக்களவை தொகு தியை தி.மு.க.விற்கு ஒதுக்கி னால் மகிழ்ச்சி, இல்லை என் றால் தலைவர் என்ன கூறு கிறாரோ அதனை செயல் படுத்துவோம்.

உங்களால் வெற்றி பெற முடியுமா என தி.மு.க.வை பார்த்து சிலர் கேட்கிறார்கள். நிச்சயமாக தி.மு.க. தான் வெற்றி பெறும்.

அனைத்து யுக்திகளையும் பயன்படுத்தி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம். மக்கள் தி.மு.க.விற்கு தான் ஆதரவு அளிப்பார்கள்.

மகளிர்க்காக பல்வேறு திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. பெண்கள் யாருக்கு ஆதர வாக இருக்கிறார்களோ அந்த கட்சி தான் வெற்றி பெறும் அந்த வகையில் பெண்கள் தி.மு.க.விற்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

வரும் தேர்தலில் தி.மு.க.வை வெற்றி பெற செய்வோம் என மொழிப்போர்த் தியாகி கள் நினைவு நாளில் சூளு ரைப்போம் என்றார்.

கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைர மணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி யாண்டி, ஸ்டாலின் குமார், கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவா ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் அவர்களின் 60வது நினைவு தினத்தில் திருவாரூர் காட்டூரில் உள்ள அவரது நினைவிடத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த சோமாஸ் கந்தன், தஞ்சை இளங்கோவன், ஒன்றியச் செயலாளர் சேகர் கலியபெருமாள், நகரச்செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், மாணவரணி அமுதா.ஆர் சந்திரசேகர், ஊராட்சி மன்றத் தலைவர் விமலா பிரபாகரன் உள்ளிட் டோர் உடன் மலரஞ்சலி செலுத்தினர்.

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலை பண்பாட்டு இயக்ககம்)
கலைஞர் நூற்றாண்டு மற்றும்
பொங்கல் விழா - இசைச் சங்கமம்
புதுப்பிக்கப்பட்ட அலுவலக கட்டட திறப்பு விழா

நாள் : 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம்: இயல் இசை நாடக மன்ற வளாகம், "பொன்னி"
எண். 31, P.S. குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 28

வரவேற்புரை : திருமதி. விஜயா தாயன்பன் உறுப்பினர்-செயலர்
தலைமை : திரு. வாகை சந்திரசேகர் தலைவர்
கட்டடம் திறப்பு மற்றும்
வாழ்த்துரை : மாண்புமிகு மு.பெ.சாமிநாதன் அவர்கள்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
மருத்துவர் க.மணிவாசன் இ.ஆ.ப. அவர்கள்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மதிப்பிற்குரிய எம்.மகேஷ்குமார் அவர்கள்
துணை மேயர், சென்னை பெருநகர மாநகராட்சி
திரு. மயிலை த.வேலு அவர்கள்
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்

தமிழக கிராமியக் கலைகள் மற்றும்
"தெய்யம்" கேரள கிராமிய நடனம்
அனைவரும் வருக!

அன்புடன் அழைக்கும்: G.மோகன்
பகுதி பிரதிநிதி, 113வது வட்டம்